அ.வ.எண்.247/2017 08.04.2022

வா.சா.2 வெங்கடலட்சுமி

வா.சா.2 மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

நான் உலிமங்கலம் கிராமத்தில் குடியிருக்கிறேன்.15 ஆண்டுகளாக உலிமங்கலம் கிராமத்தில் தான் குடியிருக்கிறேன்.அந்த ஊரில் என் அப்பாவும் எங்களுடன் தான் இருந்தார். எனக்கு திருமணம் ஆன பின்பு எனது பெற்றோருக்கு கருத்து வேறுபாடு ஏற்பட்டு தற்பொழுது அவர்கள் தனியாக வசிக்கிறார்கள். 2017 ல் இந்த வழக்கு தாக்கல் செய்தோம். என் தாத்தா சொத்தில் எனக்கு பாகம் வேண்டும் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவாசொத்துக்கள் திகடரப்பள்ளியில் உள்ளது. தாவாசொத்து அத்திமுகம் கிராமத்தில் இருப்பதாக சொன்னால் அது தவறு என்று சொன்னால் திகடரப்பள்ளி அத்திமுகத்தில் தான் உள்ளது. அத்திமுகத்தில் இருந்து திகடரப்பள்ளி கிராமம் 4 கி.மீ தூரத்தில் உள்ளது. அத்திமுகம் கிராமத்தில் தாவா சொத்துக்கள் இல்லை. திகடரப்பள்ளி கிராம்தில் தான் சொத்துக்கள் உள்ளது.தாவா சொத்தின் சர்வே எண். 171/4பி 3 ஏக்கர் 96 செண்ட்.சர்வே எண். 180/7ஏ1 12 செண்ட், சர்வே ஏ்ண. 180/7ஏ2 ல் 12 செண்ட், சர்வே எண்.310/4ஏ ல் 19 செண்ட் , சர்வே எண்.310/3ஏ ல் 12 செண்ட். மேற்படி சொத்துக்களுக்கு எல்லைகள் எனக்குத் தெரியாது. 1ம் வாதி என் தம்பி. நானும் எனது தம்பியும் தாவா சொத்தில் சுவாதீனத்தில் இல்லை என்று சொன்னால் சரிதான். தாவா சொத்து என் தாத்தா முனியப்பாவிற்கு பாத்தியப்பட்டிருந்தது. என் தாத்தா முனியப்பா 2001 ல் இறந்து விட்டடாரர்.என் தாத்தா முனியப்பாவிற்கு சுப்பம்மா,வெங்கடம்மா என்ற 2 மனைவிகள்.சுப்பம்மா இறந்த பின்பு தான் என் தாத்த வெங்கடம்மாவை திருமணம் செய்தார். சுப்பம்மா உயிருடன் இல்லை. அவர் எப்பொழுதுஇறந்தார் என்று எனக்குத் தெரியாது. சுப்பம்மாமவிற்கு லட்சுமம்மா,வெங்கடேஷ் ஆகியோர் வாரிசுகள். எனது பாட்டி வெங்கடம்மாவும் இறந்து விட்டார்.அவர் இறந்தது எப்பொழுது என்று எனக்குத் தெரியாது. வெங்கடம்மாவிற்கு குஜ்ஜம்மமா, முனிரத்தினம்மா, சுப்பம்மா, சாவித்ரம்மா, பார்வதம்மா. பாப்பையா ஆகியோர் வாரிசுகள். மேற்படி பாப்பையா தான் எனது அப்பா. குஜ்ஜம்மா இறந்துவிட்டார்.அவருக்கு 4பேர் வாரிசுகள்.அவர்கள் பெயர் ஆனந்தா, கோவிந்தராஜீ, பத்மா, நாகராஜ். எனது தாத்தாத உயிருடன் இருந்த போது அ வரது 2 மனைவி வாரிசுகளுக்கிடையே 2001ல் வாய் மொழியாக பாகம் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. வாய் மொழி பாகப்படி தாவா அ அட்டவனை சொத்துக்கள் முதல் மனைவி வாரிசுகளுக்கு கொடுக்கப்பட்டு அவர்கள் சுவாதீனத்தில் அந்த சொத்துக்கள் இருந்தது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்ளை எனது தாத்தா முனியப்பா சுயமாக வாங்கினார். வா.சா.ஆ.1 கிரயப்பத்திரத்தில் என் தாத்தா சர்வே எண்.4/1ஏ, 4/7 ஆகியவற்றை வாங்கியுள்ளார்.வா.சா.ஆ.1 ல் குறிப்பிட்டுள்ள சொத்து குறித்து இந்த வழக்கு தாக்கல் செய்யப்படவில்லை என்று சொன்னால் சரிதான். சர்வே எண்.310/3ஏ மீதும் இந்த வழக்கு தாக்கல் செய்யப்படவில்லை என்று சொன்னால்

சரியல்ல.தாக்கல் செய்துள்ளோம். முனியப்பாவின் 2ம் மனைவியின் மக்கள் என்னையும் எனது தம்பியையும் பாகம் பிரித்துக்கொள்ளலாம் என்று அழைத்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் எனது அத்தைகளுக்கு பாகம் கொடுக்கக்கூடாதென்றும் எங்களுக்கே சொத்து கொடுக்க வேண்டுமென்று பிரச்சனை செய்தோம் என்று சொன்னால் சரியல்ல. அதனால் தான் எங்களதுபாகத்தை எங்கள் அப்பாவிற்கு கொடுத்தோம். மற்ற வாரிசுகளுக்கு தனிதனியாக சொத்துக்கள் கொடுக்கப்பட்டும் 2016 ல் பாகப்பிரிவினை ஏற்பட்டட்டது என்று சொன்னால் சரியல்ல. சர்வே எண். 180/7ஏ1 மற்றும் 7ஏ2 சர்வே எண்.171/4 பி யை விட விலை அதிகம் என்று சொன்னால் சரியல்ல.அனைத்து சொத்துக்களும் ஒரே இடத்தில் தான் உள்ளது. என் தாத்தாவின் முதல் மனவையின் வாரிசுகள்அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட சொத்தில் தனி சுவாதீனத்தில் உள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல. எனது தாத்தாவின் மூத்தமனைவி மற்றும் இளைய மனைவி வாரிசுகளுக்கிடையே வாய் மொழி பாகம் ஏற்பட்ட விவர்ம் இந்த வழக்கு தாக்கல் செய்த பின்பு தான் தெரியும். எனது அப்பாவிற்கு எந்த சொத்துக்கள் பாகமாக கொடுக்கப்பட்டுள்ளது என்று எனக்குத் தெரியாது.எனது அப்பாவிற்கு சர்வே எண்கள் 180/7ஏ1 ,180/7ஏ2 ,171/4 பி ல் சொத்துக்கள் கொடுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் அது எனக்குத் தெரியாது. எனது அத்தைகளுக்கு சர்வே எண்.171/4பி ல் உள்ள சொத்துக்கள் மட்டும் கொடுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். எனது அத்தைகளுக்கு குறைவாக தான் சொத்துக்கள் கொடுத்துள்ளார்கள் என்றும் எனது அப்பாவிற்கு அதிகமாக சொத்துக்கள் கொடுத்துள்ளார்கள் என்றும் சொன்னால் சரியல்ல. எனது அப்வாவிற்கு கொடுத்த சொத்துக்கள் தான் மதிப்பு அதிகமானவை என்று சொன்னால் சரியல்ல. ஏற்கனவே பாகப்பிரிவினை ஆகிவிட்டதால் நாங்கள் பாகப்பிரிவினை கேட்க முடியாது என்று சொன்னால் சரியல்ல. எங்களுக்கும் சேர்த்து தான் எனது அப்வாவிற்கு பாகம் கொடுத்துள்ளார்கள் என்றும் எனக்கு பாகம் வேண்டுமென்றால் எனது அப்வாவிற்கு ஒதுக்கிய சொத்துகளை தான் கேட்க வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.